இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

நாங்கள் எப்போதும் துணிவுடன் இருக்கிறோம். இவ்வுடலில் குடியிருக்கும் வரையில் நாம் ஆண்டவரிடமிருந்து அகன்று இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும். நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல, நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம். நாம் துணிவுடன் இருக்கிறோம். இவ்வுடலை விட்டகன்று ஆண்டவரோடு குடியிருக்கவே விரும்புகிறோம். எனவே நாம் இவ்வுடலில் குடியிருந்தாலும் அதிலிருந்து குடிபெயர்ந்தாலும் அவருக்கு உகந்தவராய் இருப்பதே நம் நோக்கம். (2 கொரி 5: 6-8)

# புலம்பெயர்ந்தோருடன் ஒன்றிணைந்து உலகில் பயணிப்போம்!

## திருத்தந்தை வேண்டுகோள்!

பல புலம்பெயர்ந்தோர் கடவுளைத் தங்கள் பயணத் துணையாகவும், வழிகாட்டியாகவும், மீட்பின் நங்கூரமாகவும் உணர்கிறார்கள் என்றும், அவரை நம்பி தங்கள் பயணத்தைக் தொடங்குகிறார்கள் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்

இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 29, ஆம் தேதி, ஞாயிறன்று, சிறப்பிக்கப்படவிருக்கும் 110-வது உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்தோர் நாளுக்காக ஜூன் 3, இத்திங்களன்று வழங்கியுள்ள செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார் திருத்தந்தை.

தொடக்கமாக, கடந்த அக்டோபர் மாதம் நிகழ்ந்த உலக ஆயர்கள் மாமன்றத்தின் கலந்துரையாடலை சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, ஒன்றினைந்த பயணம் என்பது இறைமக்களின் கூட்டுப் பயணமாகவும், இறையாட்சியின் வருகையின் பணியில் தனிவரம் மற்றும் பணிகளுக்கு இடையிலான பயனுள்ள உரையாடலாகவும் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் செல்லும் பயணத்தை சித்தரிக்கும் விடுதலைப் பயணம், இயல்பாகவே நினைவுக்கு வருகிறது என்று கூறியுள்ள திருத்தந்தை, அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரத்திற்கான அம்மக்களின் இந்த நீண்ட பயணம், இறைவனுடனான அவரது இறுதி சந்திப்பை நோக்கிய திருஅவையின் பயணத்தை முன்னறிவிக்கிறது என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். அவர்களின் இந்தப் பயணங்கள், "நமக்கோ விண்ணகமே தாய்நாடு; அங்கிருந்துதான் மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக்



புலம்பெயர்ந்தோரை சந்திக்கும் திருத்தந்தை

காத்திருக்கிறோம் (காண்க. பிலி 3:20) என்ற புனித பவுலடியாரின் வார்த்தைகளை நமக்கு நினைவூட்டுகின்றன என்றும் விளக்கியுள்ளார் திருத்தந்தை.

மோசேயின் காலத்து இஸ்ரயேல் மக்களைப் போலவே, புலம்பெயர்ந்தோர் பெரும்பாலும் அடக்குமுறை, முறைகேடு, பாதுகாப்பின்மை, பாகுபாடு மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளின் பற்றாக்குறையிலிருந்து புலம்பெயர்ந்து செல்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை

பாலைநிலத்தில் பசி, தாகம், நோய் மற்றும் விரக்தியால் சோதனைகளையும் தடைகளையும் எதிர்கொண்டதுபோலவே, இன்றைய நம் புலம்பெயர்ந்த சகோதரர் சகோதரிகளும் எதிர்க்கொண்டு வருகின்றனர் என்று ஒப்பிட்டுக்காட்டியுள்ளார் திருத்தந்தை.

புலம்பெயர்ந்தோர் பலர், கடவுளைத் தங்கள் பயணத் துணையாகவும், வழிகாட்டியாகவும், மீட்பின் நங்கூரமாகவும் உணர்கிறார்கள் என்றும், அவரை நம்பி தங்கள் பயணத்தைக் தொடங்குகிறார்கள் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, அவரில், அவர்கள் மனச்சோர்வின் தருணங்களில் ஆறுதல் காண்கிறார்கள். என்றும், இருப்பினும் அவர்களின் பயணத்தில் பல நல்ல சமாரியர்கள் அவர்களுக்கு உதவி வருகிறார்கள் என்றும் உரைத்துள்ளார்.

புலம்பெயர்ந்தோர் தங்களின் எதிர்நோக்கில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள் என்றும், பாலைநிலங்கள், ஆறுகள், கடல்கள் என அவர்கள் கடந்து செல்லும் அத்தனை பயணங்களிலும் அவர்கள் தங்களுடன் திருவிவிலியத்தையும், இறைவேண்டல் நூல்களையும், செபமாலைகளையும் நம்பிக்கையுடன் சுமந்து செல்கிறார்கள் என்றும் உரைத்துள்ளார் திருத்தந்தை.

கடவுள் தனது மக்களுடன் மட்டுமல்ல, அவர்களுக்குள்ளும் நடந்துசெல்கிறார், அவர் வரலாற்றில் பயணம் செய்யும் ஆண்கள் மற்றும் பெண்களுடன், குறிப்பாக, சிறியவர்கள், ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டவர்களுடன் தன்னை அடையாளப் படுத்துகிறார் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, இத்தகைய கடவுளின் செயலில் அவரது மனுவுருவெடுத்தலின் மறைபொருளைக் காண்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

***செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்***

## மூவொரு இறைவனில் தூய ஆவியார்– இறையியல் பயிற்சி நடைபெற்றது

கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையத்தில், கடந்த 25, மே மாதம், காலை 9 மணிக்கு மாதாந்திர இறையியல் பயிற்சி தொடங் கப்பட்டது. அருள்பணி ஜேம்ஸ் கபிரியேல் அவர்கள், மூன்று தலைப்புகளில் தூய ஆவியானவரைப் பற்றி விளக்கவுரையாற் றினார்.

மூவொரு கடவுளில் தூய ஆவியானவரைப் புரிந்துக்கொள்வதற்கு மூவொரு கடவுளை நன்கு அறிந்திருக்க வேண்டும். மூன்று ஆள்களும் தங்களது ஒரே இயல்பிலிருந்தும், செயல்பாடுகளிலும் பிரிக்க முடியாதவாறு உள்ளனர். மூவொரு கடவுளிடம் வேறுபாடற்ற ஒரே செயல்பாடு உள்ளதால், அன்பில் ஒன்றாய் இணைந்து ஒரே கடவுளாக இருக்கின்றார்கள் என தெளிவான சான்றுகளோடு விளக்கினார். மேலும், இயேசு தெய்வீகத்தன்மையிலும் மனிதத்தன்மையிலும் 33 வருட இவ்வுலக வாழ்வில், அவர் எவ்வாறு கடவுளுக்கும் மனிதருக்கும் இணைப்பாளராக இருந்து, தூய ஆவியானவரின் வல்லமையால் செயல்பட்டார் என்பதையும் விளக்கினார்.

அருள்பணி ஜேம்ஸ் அவர்கள் பேசுகையில், பழைய ஏற்பாட்டில் தூய ஆவியானவர் இறைவாக்கினர்கள் வழியாக இருந்து செயல்பட்டாலும், புதிய ஏற்பாட்டில் அவர் மிகச் சிறப்பாக ஒவ்வொருவர் உள்ளத்திலும் தங்கி இறுதிவரை நம்மோடு தங்கி இருப்பார் எனும்போது, நாங்கள் பெருமகிழ்ச்சி அடைந்தோம் (மத் 28:20). ஆதனால்தான், எல்லோரையும் சீடராக்குங்கள் என்ற கட்டளை நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாக விளக்கினார்.

திருவழிப்பாட்டில் தூய ஆவியாரின் செயல்பாடுகளைப் பற்றி அவர் மேலும் பேசுகையில், திருப்பலியில் நாம் பாஸ்கா மறைப்பொருளில் இயேசுவின் பிறப்பு, வாழ்வு, மரணம், உயிர்ப்பு மற்றும் விண்ணேற்ற நிகழ்வை நாம் இயேசுவின் வாழ்வோடு கொண்டாடுகிறோம். இறை வார்த்தையைத் தியானிப்பது அப்பம் இயேசுவின் உடலான நற்கருணையாக மாறுவது, செபித்தல் ஆகியவற்றோடு, அருள்சாதனங்கள் வழியே தூய ஆவியானவர் நம்மைப் புனிதப்படுத்துகிறார். நம்மை



*குழு பகிர்வில் ஆர்வத்தோடு பங்குபெறும் உறுப்பினர்கள்*

இயேசுவின் சாட்சிகளாக, இயேசுவைப் போலவே மாற்றுகிறார் என்றும் கூறினார்.

கிறிஸ்துவ வாழ்வில் தூய ஆவியானவரோடு ஒன்றித்திருக்க செபவாழ்வு இன்றியமையாதது. மேலும், நாம் பாவத்தை வெறுக்கவும், தியாக வாழ்வு (சிலுவை) வாழவும், கடவுளை நமது வாழ்வில் முதன்மைப்படுத்தவும், இயேசுவை மாட்சிபடுத்தவும், திருஅவை அங்கத்தினரோடு ஒன்றித்திருக்க பெந்தகோஸ்து பெருவிழாவில் ஆவியானவர் நம்மில் வர வேண்டும் என்றார்.

மேலும் நமது வாழ்க்கையில் தூய ஆவியானவர் நம்மை இயக்க நாம் அனுமதிக்க வேணடும். துன்ப நேரத்திலும் நாம் கடவுளுக்கு நன்றி சொல்லி அவரை போற்ற வேண்டும் என்றார்.(எபே 5 : 19)

நிறைவாக, நாம் தூய ஆவியாரின் ஆலயமாக உள்ளதால், அவரை நாம் நாளும் அன்பு செய்ய வேண்டும் என்றும், அவருக்கு உண்மையாக வாழவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அன்றைய பயிற்சி, குழு பகிர்வோடு, மாலை 4 மணிக்கு முடிவுற்றது. இறையியல் பயிற்சியைச் சிறப்பாக வழங்கிய அருள்பணி ஜேம்ஸ் கபிரியேல் அவர்களுக்கு நன்றி நவிலப்பட்டது

*-திரேசா மரியநாயகம், கிள்ளான்*

# ‘திருமணமும் செல்லாநிலையும்’ கோலாலம்பூரில் ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது

கோலாலம்பூர்: கடந்த 22 மே மாதம் 2024, கோலாலம்பூர் மாமறைமறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி கழக மையத்தில் ((APC) கத்தோலிக்க திருமண தயாரிப்பு



பயிலரங்கத்தில் பங்குபெற்ற பங்கு பிரதிநிதிகளும் அருள்பணியாளர்களும்

பணிக்குழு (CIMP) ஏற்பாட்டில், திருமண செல்லாநிலை குறித்து ஒரு நாள் பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. 4 மொழிகளில் பல பங்குகளைச் சேர்ந்த திருமண பணிக்குழு பொறுப்பாளர்கள் ஏறக்குறைய 270 பேர் இதில் கலந்து கொண்டனர்.

காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வானது, பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் அறிமுக நிகழ்வில் அனைவரையும் அன்போடு வரவேற்றார். இந்த பயிலரங்கத்தை வழிநடத்த அருள்பணி பிரான்சிஸ்கோ அனிபன் அவர்கள் ஆங்கிலத்திலும், தமிழில் அருள்பணி பென்யமின் சூசை (தமிழ்நாடு), அருள்பணி சிமோன் இயீ, சீன மொழியிலும், அருள்பணி ருடோஃல் ஜோன்ஸ் அவர்கள் மலாய் மொழியிலும் வழிநடத்தினர். இப்பயிலரங்கதில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தைச் சார்ந்த அருள்பணி வில்லியம் மைக்கல் மற்றும் அருள்பணி பீட்டர் அந்தோனி அவர்களும் கலந்து கொண்டார்கள்.

தமிழில் இந்தியாவை சேர்ந்த அருள்பணி பென்யமின் அவர்கள் மிகச் சிறப்பான முறையில் திருமண உறவை பற்றி பேசினார். உலகிலேயே கத்தோலிக்க திருஅவையில் மட்டுமே எழுதப்பட்ட திருமணம் குறித்த சட்டங்கள் பல உள்ளன. அதிலும் திருமணத்தின் மேன்மையை போற்றும் வகையில் திருஅவை சட்ட தொகுப்புகள் (Canon Law) நமக்கு கொடுக்கப்பட்டுள்ளன. திருஅவை திருமண சட்ட தொகுப்புப்படி கத்தோலிக்க திருமணத்தை திருஅவை எவ்வாறு புரிந்து கொள்கிறது என்பதை பற்றி மிக தெளிவான விளக்கம் தந்தார்

முற்பகுதியில் திருமணம் என்றால் என்ன என்பதையும், திருமணத்தின் பண்புகள், திருஅவையின் உள்ளடக்கம் மற்றும் கத்தோலிக்க திருமணத்தின் தடைகள் பற்றி பேசினார்.

2 -ம் பகுதியில், திருமணத்தின் வாக்குறுதி, கத்தோலிக்க திருமணத்தில் விவகாரத்து, திருமண உறவை ரத்து செய்தல் போன்ற பிரச்சனைக்குத் தகுந்த விளக்கங்களையும் தீர்வையும் கூறினார். வந்திருந்தவர்களின் அனைவரின் கேள்விகளுக்கும் அவர் தந்த விளக்கம் மிகவும் சிறப்பாக அமைந்தது. இப்பயிலரங்கம் மாலை 4.00 மணிக்கு நிறைவுற்றது.

*-ஜெனோவா பளிங்குராஜ், கிள்ளான்*



‘நாம் இறைவேண்டல் செய்யும்போது, கடவுள் நம்மை தனது கரங்களில் ஏந்தி ஆசீர்வதித்து, பின்னர் தனது திரு உடலைப் பிட்டு நமக்குக் கொடுக்கிறார். இதன் காரணமாக, நாம் அனைவரின் பசியையும் போக்கி நம்மை திருப்திபடுத்திக்கொள்ளலாம்’

திருத்தந்தை பிரான்சிஸ்.

# ‘நமது விவிலியம், நாம் அறிவோம்’ மெந்தகாப் பங்கில் விவிலிய உருவாக்கப் பயிற்சி நடைபெற்றது

**மெந்தகாப், பகாங்:** இங்குள்ள புனித சகாய அன்னை பங்கின் தமிழ் திருத்தூதுப் பணிக்குழுவின் ஏற்பாட்டில் கடந்த ஜூன்



திங்கள் முதலாம் திகதி ‘நமது விவிலியம், நாம் அறிவோம்’ என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கம் நடைபெற்றது. பங்குத்தந்தை அருள்பணி தேரன்ஸ் தோமஸ் அவர்களின் ஆசியோடு நடைபெற்ற இப்பயிலரங்கத்தை சகோ. ஆர்.கே.சாமி அவர்கள் முழுமையாக வழிநடத்தினார். இது திருவிவிலியத்தின் அறிமுகச் சொற்பொழிவாகவும் அமைந்தது. திருவிவிலியத்தின் பிரிவுகள், விவிலியத்தின் வேறுபாடுகள், உடன்படிக்கையின் பொருள், இறை ஏவுதல், நூல்கள் பிரிவுகள், எழுதப்பட்ட காலங்கள், மையச் செய்தி போன்றவை விவரிக்கப்பட்டன.

காலை 9 மணிக்குத் தொடங்கிய இப்பயிலரங்கத்தை ஏற்பாட்டுக்குழு தலைவர் அந்தோணி பலவேந்திரன அவர்கள் தொடக்க இறைவேண்டலோடு தொடக்கி வைத்தார்.

அன்று மதிய உணவுக்குப் பிறகு திருவிவிலியத்தின் இயல்பு பற்றியும், கேள்வி பதில் அங்கமும் இடம்பெற்றது. அனைத்து கேள்விகளுக்கும் சிறப்பாக பதில்கள் தந்த சகோ. ஆர்.கே.சாமி மாலை 4.00 மணி அளவில் பயிலரங்கத்தை நிறைவு செய்தார். நிறைவாக, அருள்பணி தேரன்ஸ் தோமஸ் அவர்களின் ஆசீயோடும், சகோ. அந்தோணி அவர்களின் நன்றியோடும் நிகழ்ச்சி நிறைவுப்பெற்றது.

-அந்தோணி பலவேந்திரன்

# ஜாசின் பங்கில் இயேசுவின் திருவுடல் திருரத்தம் பெருவிழா கொண்டாடப்பட்டது

ஜாசின், மலாக்கா: இங்குள்ள தூய ஆவியார் ஆலயத்தில் இயேசுவின் திருவுடல் திருரத்தம் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. திருத்தொண்டர் அருமைநாதன் அவர்கள் "இதோ உலகம் முடிவுவரை உங்களோடு நான் இருப்பேன்" என்றுரைத்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து, தூய நற்கருணையில் நம்மில் என்றென்றும் உடனிருக்க ஆவலாக இருக்கிறார் என்ற அழைப்போடு திருப்பலிப்பலிக்கு இறைமக்களை வரவேற்றார்.

தொடர்ந்து, தமிழகத்தின் தஞ்சாவூரிலிருந்து வருகை தந்த அருள்பணி இருதயராஜ் அவர்கள், இயேசுவின் திருவுடல் திருரத்தம் நம்மீது அளவற்றை அன்பை வெளிப்படுத்தும் இயேசுவின் மறையுடலாகவும், அவரது தியாகத்தின் வெளிப்பாடாகவும், உறவைப் பகிரும் அற்புத உணவாகவும் உள்ளதைப் பகிர்ந்து கொண்டார்.

பகிர்வு எனும் போது பொருள், பணம், சேவை, மற்றும் உதவிகள் போன்றவை அடங்கும். எனவே தியாகமே உருவான இயேசுவே நற்கருணை வழி நம்மை நாடி வருகிறார் என்றும், அவரையே உள்ளம் நலம் தரும் ஆன்மீக உணவாக நாம் ஏற்கிறோம் என்றும் நற்கருணைக்கு விளக்கம் தந்தார். பங்குத்தந்தை அருள்பணி ம. தேவதாசன் அவர்களின் உடனிருப்பில்



பெருவிழா திருப்பலியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்

கொண்டாடப்பட்ட இப்பெருவிழாவில் ஏறக்குறைய 300 பேர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

-ஆவி. டேவிட் குளுவாங்

# என்றும் இறைவனில் வாழ்வோம் இறைமக்களாக!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் பதினோராம் வாரத்தில் நுழைகிறோம். நாம் இன்று படிக்கக்கேட்கும் வாசகங்கள் இறையாட்சி திடிரென்று தோன்றுகின்ற ஒன்றல்ல, அது படிப்படியாக வளரக்கூடியது என்பதாகும. நற்செய்தியில் ஆண்டவர் இயேசு இறையாட்சியை கடுகு விதைக்கு ஒப்பிடுகின்றார். கடுகுவிதை என்பது எல்லா விதைகளிலும் சிறிய விதை. ஆனால், அது வளர்ந்து மரமாகின்றபோது வானத்துப் பறவைகள் எல்லாம் தங்குகின்ற அளவுக்கு பெரிய மரமாக மாறுகின்றது. அதுபோன்றுதான் நாசரேத்து என்னும் குக்கிராமத்தில் விதைக்கப்பட்ட இறையாட்சிக்கான விதை, வளர்ந்து, எல்லா மக்களையும் தன்னுடைய ஆளுகைக்குள் கொண்டுவரும் என்கிறார் இயேசு கிறிஸ்து.

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் இவ்வாறு படிக்கின்றோம். “உயர்ந்த கேதுரு மரத்தின் நுனிக்கிளை ஒன்றை நானே நடுவேன். இளங்கொழுந்து ஒன்றை அதன் நுனிக் கொப்புகளிலிருந்து கொய்து, ஓங்கி உயர்ந்ததொரு மலைமேல் நடுவேன். அது கிளைத்து, கனி தந்து, சிறந்த கேதுரு மரமாகத் திகழும். அனைத்து வானத்துப் பறவைகளும் அதனைத் தம் உறைவிடமாகக் கொள்ளும். நம் வாழ்வில் சிறியதுதானே என எதையும் அலட்சியப் படுத்தாமல், ஒதுக்கிவிடக் கூடாது. ஏனென்றால், அவையும் மிகப் பெரிய பலன் தரக்கூடியதாக இருக்கும்.

தூய பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இவ்வாறு கூறுவார், “நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினார்; கடவுளே விளையச் செய்தார். நடுகின்றவருக்கும் பெருமை இல்லை; நீர் பாய்ச்சுகிறவருக்கும் பெருமை இல்லை; விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை” (1 கொரி 3: 6-8). மனிதர்களாகிய நாம் அனைவருமே கடவுளுடைய கையில் கருவிகள்தானே ஒழிய, நாம் கடவுளாக இருக்க முடியாது என்பதை பவுலடியார் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

நம் பார்வையில் சிறியதாக தோன்றுவது, இறைவனின் பார்வையில் மதிப்புக் குரியதாகின்றது. “கடுகுவிதை சிறியதுதான். ஆனால் அது, வளர்ந்ததும் எல்லாச் செடிகளையும்விட பெரியதாகி வானத்துப் பறவைகள் வந்து, தங்கி கூடு கட்டு மளவுக்கு பெருங்கிளைகள் விடும்” என்கிறார் இயேசு. அந்தச் சிறிய கடுகு விதையைத்தான் விண்ணரசுக்கு ஒப்பிடுகின்றார். சிறிய, எளிய மக்களையே தம் பணிக்குத் தேர்ந்தெடுக்கின்றார். நம் வாழ்வில் எதையும் சிறியதென, சிறியவர்களென அலட்சியப்படுத்தாமல், அனைத்தும் மதிப்புக்குரியது என்பதை உணாந்து, அதற்குரிய, அவர்களுக்குரிய மதிப்பை, மாண்பைக் கொடுத்திடுவோம்.

இயற்கை அற்புதமான கொடை. அதனை அமைத்து பராமரித்து வருகிறவர் இறைவனே. ஆதனை காத்து ஆண்டு கொள்ளும் அதிகாரத்தையும் மனித குலத்திற்கு கொடுத்துள்ளார். அதனை அடுத்த தலைமுறையினருக்கு பத்திரமாக விட்டுச் செல்ல வேண்டியது நம்முடைய கடமை. நாம் உறங்குகின்ற நேரத்தில் விழித்திருந்து முளைவிடுகின்ற விதையைப் போல நாம் முடங்குகின்ற நேரத்தில் தம் வல்லமையை வெளிப்படுத்தி இறையாட்சியை வளரச் செய்கின்றவர் நம் ஆண்டவர் தான்.

நாம் ஆண்டவரில் நம்பிக்கை வைத்து வாழ்ந்தோமெனில், கடவுள் நம் வழியாய் வல்ல செயல்களைச் செய்வார். ஆதலால், நாம் புனித பவுலைப் போன்று நம்பிக்கையின் அடிப்படையில் வாழ்ந்து, இயேசுவுக்குச் சான்று பகர்ந்து, அவர் தரும் ஆசிகளைப் பெறுவோம்.

*த. ஜோசப் சகாய ஆனந்த், மலாக்கா.*

**பொதுக்காலம்-11-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசேக் 17: 22-24 |
| திரு.பாடல் | 92: 1-2. 12-13. 14-15 |
| 2-ம் வாசகம் | 2கொரி 5: 6-10 |
| நற்செய்தி | மாற்கு 4: 26-34 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**